# மெய்ஞ்ஞானபானு.

மதுரைத்

துரைத்தனத்தாரவித்தியாசாலைத்

தமிழ்ப்பண்டிதர்

பாட்திமுதலியாரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை:

இந்துதியலாஜ்கல்யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விகிர்தி ஹு மாசிமீ.

1891.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# சேக்கிழார்சுவாமிகள்

அருளிய "சிவனடியேசிந்திக்கு" மென்னும்

செய்யுளுரையாகிய

# மெய்ஞ்ஞானபானு.

## காப்பு.

நேரிசைவெண்பா.

சிவனடியே யென்னுமருட் சேக்கிழார் செய்யுட்
கவனருளா லாமுரைநெஞ் சேயா — முவமையில்பொன்
னத்தி விநாயகரன் பாலருளு மானைமுகச்
சித்தி விநாயகர்தாள் சேர்.

"உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவியநீர்மலிவேணியன்
அலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்."
"வேதநெறிதழைத்தோங்கமிகுசைவத்துறைவிளங்கப்
பூதபரம்பரைபொலியப்புனிதவாய்மலர்ந்தழுத
சீதவளவயற்புகலித்திருஞானசம்பந்தர்
பாதமலர்தலைக்கொண்டுதிருத்தொண்டுபரவுவாம்".

திருவளர் பொதியத் தருள்வளர் தவத்தி - னகத்திய னென்னு மகத்துவ முனிவரற் - கேற்றுடைப் பெருமான் சாற்றிய விலக்கணத் - தியலிசை நாடகம் பயில்வகை மூன்று - புணர்வோ ருண்மகிழ் புணர் தரு சுவைத்தாய்-பொற்புறு மற்புதம் பற்பல நிகழ்த்தி- யெப்புவிப்

பாடையு மொப்பில தாகி - யோங்கி யுயருமிப் பாங்குறு தமிழின் முற்காலத்துச் சங்கப்புலவர் திருவள்ளுவர் ஔவையார் முதலியோ·· ரும் பிற்காலத்துக் கச்சியப்பசிவாசாரியர் சிவப்பிரகாசசுவாமிகள் சி ஞானசுவாமிகள் முதலியோருமாகிய தெய்வப்புலமைநிரம்பிய பு வோர்பலரு மலைமேலிட்ட தீபம்போலவிளங்கவும், மின்மினியு மொவ்வாதசிலர்தாமும் புலவரெனக்காணப்பட்டு அடிப்பட்ட சான் றோரிடத்து முறைப்பட்ட கேள்வியிலராயும், இலக்கணமுதலிய கரு வி நூல்களை நன்குணர்ந்து இலக்கியவாராய்ச்சி நிரம்பிமுதிர்ந்த வறி விலராயும், அரியநூல்களுக்கு நச்சினார்க்கினியர் பரிமேலழகர் சேனு வரையர்முதலிய பழைய வுரையாசிரியர்களும் திராவிடபாஷியகர்த் தாவாகிய சிவஞானசுவாமிகள் முதலியோருமெழுதிய வுரைகளையும், அவர்களவ்வுரைகளாகிய முத்துக்கோவைகளுக்குத் தொங்கலாக மா ணிக்கம் வயிரமுதலியவற்றாலாய பதக்கங்களை யமைக்குமாறுபோல முன்னோரியற்றிய செய்யுட்களையு முரைகளையு மாங்காங்கு சிறித சிறிதவரெடுத்துக்கூறு முறைமையினையும் நோக்காராயு மிருந்தும், அவர்கள் அரியசெய்யுள்களுக்கு மேற்கூறு முரையாசிரியர்கள் விரு த்தியுரைகளினு மகலமாக வுரைசெய்யக்கருதி, வறியன் றனக்குரி யவோர் சிறு கந்தையில் அதன் வடிவந்தெரியாவண்ணஞ் செல்வர் பலரிடத்துஞ் சென்றிரந்து பெற்றபலவண்ணமுள்ள வுயர்ந்தவாடை களின் கிழிகளைப்பொதிந்து அதுவு மிகவுமகன்று நீளுமாறுதைத் துப் பொத்திய போர்வையாகிய பொந்தைபோலக் கோவைப்பட வெழுதப்படாததாயுஞ் சாமானியமாய பலராலுஞ் சொல்லப்படுவ தாயும் சிலவரிகளி லடங்குவதாயும், ஆழ்ந்து நுண்ணியபொருளை விளக்கமாட்டாததாயு முள்ள தமதுரைக்குத் தொல்காப்பிய முதலி யவிலக்கணச் சூத்திரங்களையும், சிவஞானபோத முதலிய ஞானநூல் களும், கந்தப்புராணஞ் சேதுப்புராண முதலியபுராணங்களு மே லைய நூல்களுமாகிய விவற்றின் செய்யுள்களையும், பல வுரையாசிரி யர்கள் கூறும் பலவரியவுரைகளையும், அவ்வுரைகளிற் காணப்படும் வேதம், பொதுநூல், ஆகமம், சிறப்புநூல், பதியியல்பு, பசுவிய ல்பு, பாசவியல்பு, அநாதிமுத்த சித்துரு, சச்சிதானந்தப் பிழம்பு, என்பன முதலியனவான வெண்ணிறந்த சொற்றொடர்களையு மிடை க்கிடைசேர்த்து இது தமதுரையெனத் தெரியாவண்ணம் பொதி ந்து, ஓர்குழந்தையிடத்துச்செம்மை, கருமை, பொன்மை முதலிய வன்னங் கிடைத்தவழி அதுவுமோரோவியனைப்போல, யானை குதி ரைமுதலிய அந்தக்கேடான சிலசித்திரங்களை யெழுதி யவற்றை யவ்

வன்னங்களாற் பளபளக்கச் செய்தபோது, சித்திரத்தியல்புணரா தோர் அவற்றைக்கண்டாச்சரிய மடையுமாறுபோல, சாமானிய சனங்கள் கண்டாச்சரிய மடையும்படி, உரைகூறுவதும், பிரசங்கஞ் செய்வதும், பத்திரிகை யெழுதுவதுமாகிய, இவ்விபரீத காலத்துச் சிவானுபூதிச் செல்வராகிய சேக்கிழார்சுவாமிகளியற்றிய பெரியபுராணத்தில் ஆளுடையபிள்ளையார் ஞானம் பெற்றமையைக்கூறுஞ்செய்யுளாகிய "சிவனடியே சிந்திக்கும்" என்னுஞ்செய்யுளுக்குக் காலவியற்கைக்கேற்பப் பலரும்பலபேதப்பட வுரைகூறி யொருவரை யொருவர்மறுத்து நிந்தித்தவமதிக்கின்றனர். ஆதலின் அச்செய்யுளின் மெய்ப்பொருளிதுவெனவும், ஏனையோருரையி னியல்பிதுவெனவுந் தெளிவித்தற்கெம்மாலிவ்வுரை செய்யப்பட்டது.

இங்ஙன மெய்ப்பொருள் கூறுதலானும், இதுவோ அதுவோ பொருளென்னு மயக்கவிருளை யொழித்தலானும், இரண்டு சிறந்த புலவர்களெழுதப்பட்ட ஞானபேதவிளக்கம், ஞானசூடாமணியென்னுமுரைகளாகிய விளக்கினொளியு மணியினொளியுந் தன்பேரொளியினடங்குமாறு கோடலானுமிவ்வுரை **மெய்ஞ்ஞானபானு** வென்னும் பெயர்த்தாயிற்று.

இஃதொருவர்மதத்தை மறுத்தற்காவது, ஒருவர்மதத்தை நாட்டுதற்காவதுகொண்ட நோக்கத்தோடு செய்யப்படாமல் உண்மைப்பொருளைவிளக்கு நோக்கத்தோடுமாத்திரஞ் செய்யப்பட்டதாதலின் அறிவுடையோ ராராய்ந்தஃதங்ஙனமாத லுணர்வார்களாக.

மேற்கூறிய செய்யுளுமதன்பொருளும் வருமாறு:—

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞான
முவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞான
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்.

இ-ள். சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம் - சிவபெருமானது திருவடியையே சிந்திக்கிற (அருட்) செல்வம் பெருகுதற்குக் காரணமாகிய சிவஞானமும், பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கியஞானம் - பிறவிக்குக்காரணமாய மலமாயாகன்மங்களை அற ஒழிக்கும் முறைமையானுயர்ந்த அவன் பணிநிற்கு ஞானமும், உவமையிலாக்கலைஞானம் - ஒப்பில்லாத பூரணகலைஞானமும், உணர்வரியமெய்ஞ்ஞானம் - உணர்தற்கரிய மெய்ஞ்ஞானமாகிய அனுபூ

திஞானமும், தவமுதல்வர்சம்பந்தர் - முதன்மையான தவப்பேற்றினை யுடையவராகிய ஆளுடையபிள்ளையார், அந்நிலையில் உணர்ந்தார் - ஞானபோனகமூட்டி யருளிய வம்மையுடனே சிவபெருமானைத் தரிசித்த வந்நிலையிலேயே உணரப்பெற்றனர்.—எ-று.

ஏகாரம் பிரிநிலை. இரண்டாமடியிற் பவம் தன் காரணமாய மலமாயாகன்மங்களையும், ஞானந் தன்காரியமாகிய பணிநிற்றலையு முணர்த்துதலின் ஆகுபெயர்கள். பணிநிற்றல் திருப்பதிகஞ்சாத்துதல். தவமுதல்வர் என்பதில் விகுதிபிரித்துக் கூட்டுக. ஞானங்கள் செவ்வெண். அந்நிலையிலேயே யெனற்பாலது அந்நிலையில் எனவிகாரமாய் நின்றது. தாம் - அசை.

வீட்டினை யடைதற்குரிய தவப்பேற்றினையுடையவராய்ப் பிறந்த மெய்யடியார்கட்கு அப்பிறப்பிலே தெய்வமுண்டென்ப தோர் சிந்தையுண்டாதலும், அத்தெய்வமு மேனையோ ரல்லர் சிவபெருமானே எனத் தெளிதலுமாகிய ஞான மொருதலையா நிகழு மன்றே. அங்ஙனம் பிள்ளையார்க்கு நிகழ்ந்து சிந்திக்குஞ் சிந்தனையைச் சிவனடியே சிந்திக்குமெனவும், தான் என்பதின்றி அவனேயாய்ச் சிந்தித்தலின் சிவஞானம் எனவும், அச்சிந்தனைக்குப்பின் நிகழ்வதாதலானும் பவத்தினையறுத்தற் கின்றியமையாதது ஆதலானும், அவன்பணிநிற்றலை யுணர்த்தும் ஞானத்தைப் பவமதனை யறமாற்றும் ஞானமெனவும், அது யாகமுதலிய கன்மப்பயன்போல அனுபவமாத்திரத்தாலழியாத முத்திப்பயனைத் தந்தேவிடுமாதலின் பாங்கினிலோங்கிய எனவும், "கற்றதுகைம்மண்ணளவு கல்லாதுலகளவா - முற்றகலைமடந்தை யோதுகிருள்" என்று ஔவையாரருளியவாறே யெண்ணிறந்த வேதாகமங்களையும் ஏனைய கலைகளையும் ஓதியு முணர்தல்யாவர்க்கு மரிதாகவும், ஓதாமலே யக்கலையினையு முற்றவுணர்ந்ததன்றி அவ்வேதாகமங்களின் சாரங்களையொருங்கு திரட்டித் தம்பணியாகிய திருப்பதிகங்களின் அமைக்குமாற்றலுமுடைமையின் உவமையிலாக் கலைஞானமெனவும், அனுபூதிஞானத்திற் சுட்டுணர்வொழிதலின் உணர்வரிய மெய்ஞ்ஞானமெனவும், ஆன்மாக்களநந்தகோடிப் பிறவியினு மடைதற்கரிய விவ்வகை ஞானங்களை யிடையீடின்றிப் பெறுதலின் அந்நிலையிலேயே எனவும், அவற்றைப் பெறுதற்குரிய வருந்தவஞ்செய்து பிறந்தமையிற் றவமுதல்வரெனவுங் கூறினர். சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானமும், பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங்கியஞானமுந் தெளிதலில் நிக

மூம் விசேட ஞானங்களாம். "அவனேதானே யாகியவந்நெறி - யேகனாகி யிறைபணிநிற்க - மலமாயைதன்னொடு வல்வினையின்றே." எனத்தெளிதலை யுணர்த்துஞ் சிவஞானபோதப் பத்தாஞ்சூத்திரத்து, ஏகனாகியென்றவரை இச்செய்யுளின் முதலடிப் பொருளாயும், பின்னுள்ளன விரண்டாமடிப் பொருளாயும் பெறப்படுமாறுங்காண்க. இத்தெளிதல் ஞானத்திற்கு மெய்ஞ்ஞானத்திற்கு மிடையே கலைஞானத்தைக் கூறிய தெற்றுக்கெனில், பிள்ளையார் சாமுசித்தராய் முற்றவமுடையராதலின் அவர் முற்பிறப்பிலேயே கலைஞானத்துள் கன்மகாண்ட உபாசனாகாண்டங்களை முற்றமுணர்ந்து ஞானகாண்டத்திற் கேட்டலுஞ் சிந்தித்தலு நிரம்பித் தெளிதலினின்றுசிறிது குறைபாட்டா லனுபூதிஞானம் நிரம்பாமல் அது நிரம்புதற்பொருட்டிப்பிறப்புற்றன ரெனவும், சூரியன் பக்குவமாகிய தாமரை நாளரும்புகளை மலர்த்துமிடத்து முன்னே யலர்த்தப்பட்டிரவிற் குவிந்திருந்த மலர்களவற்றினிடையே தாமே விரியுமாறுபோல, சிவபெருமான் முன்னின்று முற்குறையாகிய தெளிதலையு மெய்ஞ்ஞானத்தையு மவர்க்குணர்த்து மிடத்து, அவரறிவின்கண்ண கலைஞானந் தானேயிடையில் விரிந்ததெனவும், உய்த்துணர்ந்து கொள்ளுமாறு வைப்புமுறைமையால் விளக்குதல் கருதியென்றுணர்க. இங்ஙனங் கலைஞானமுதலியன நிரம்பிய முற்றவமுடையா ரென்பதைச் சிவஞானபோத மெட்டாஞ்சூத்திர வுரையில் "ஆளுடையபிள்ளையார் முதலாயினோர்க்குத் தவமின்றியும் ஞானம் நிகழ்ந்தவா றென்னையென்னுங் கடாவைவிடுத்தற்கு மேற்செய்துழியென வீண்டும் வலியுறுத்தார்" எனச் சிவஞானயோகிகள்கூறுங் கூற்றானு முணர்க. இதனாற் சிவபெருமானைக் கண்ணாற் றரிசித்தவழித் திருவடிக்கண்ணே யேகமாய்க் கசிந்தசிந்தனையும், சிந்தித்தவழி யவன்பணிசெய்து வழிபடுங் கருத்தும அக்கருத்துதித்தவழி அப்பணியாகிய பாமாலைசாத்தற்குச் சாதனமாகிய கலைகளில் முற்றுணர்வும் பின்சுவானுபூதிப் பெருவாழ்வுமாகிய இந்நான்கும் முறையே நிகழ்ந்தனவென்பார் இங்ஙனம் ஞானத்தை நான்காகப்பகுத்துக் கூறினர்.

ஞானங்குணமாய் வியாபகமாய் ஒன்றாய்க் கண்ணொளிபோலப் பதார்த்தங்களை விளக்குமான்மப் பிரகாசமாம். இது ஒன்றேயாயினும், கண்ணொளியைமுற்று மறைக்குங்குருடும், அவ்வொளியைத் தாரதம்மியமாகக்காட்டும் படலமும், புகரும், மாசும்போல, மலத்தான் மறைப்புண்டும், கலாதிமுதலிய கருவிகளோடுகூடிச்சிறிது சிறி

தாய்விளக்கமுற்றும் அக்கண்ணிற் குற்றங்களொழிந்து அது சூரியப்
பிரகாசத்தோடுகூடிப் பூரணமாய் விளங்குவதுபோல, கருவிகரணங்
களின்றி வியஞ்சகமா யுடனின்றுணர்த்துந் திருவருளோடுகூடும்
வழி வியாபகமாய் விளக்கமுற்று மிருப்பதாதலின், அவத்தை, கருவி
முதலிய பேதங்களாற் பலவாறுவகுக்கப்படும். அவற்றுள், அவத்தை
பற்றிப்பரம், அபரமென விரண்டெனவும், கருவியும் விடயமும்பற்றிப்
பாசஞானம், பசுஞானம், பதிஞானமென மூன்றெனவும், முயற்சிப
ற்றிக்கேட்டன் முதலியஞானம் நான்கு எனவும் விசேடப்பொரு
ளெண்ணிறந்தவைபற்றி விசேடஞானங்க ளெண்ணிறந்தவைகளெ
னவுஞ் சொல்லப்படும். அன்றியுமேற்கூறப்பட்ட வகையின் வகை
யாய்! சாக்கிரஞானமுதலியனவும் அளவைஞான முதலியனவுமாகி
ய பலவுங்கொள்ளப்படும். இவ்வகைஞானங்களெல்லாம் ஆளுடைய
பிள்ளையாருணரப் பெற்றனரெனக்கூறுதலே யிக்கவியின்கருத்தாம்.
எவ்வாறென்னில் ஞானபோனக முண்டவந்நிலையி லென்றமையால்
ஏகமாய ஞானத்தையுணரப்பெற்றமையும், சிந்திக்குஞ்ஞானம், தூங்கி
யஞானம், கலைஞானமென்றமையால் அபரஞானத்தையும், மெய்ஞ்
ஞான மென்றமையாற் பரஞானத்தையு முணரப்பெற்றமையும், அன்
றியு மந்நால்வகை ஞானத்தாற் பசுபதிபாசத்தியல்பும், கேட்டல்,
சிந்தித்தல், தெளிதல், நிட்டையாகிய விவற்றினியல்பும் விளங்கப்
பெறுதலின், பதிஞானமுதலிய மூன்றுங்கேட்டன் முதலியஞானம்
நான்கு முணரப்பெற்றமையும், அவற்றுண்மெய்ஞ்ஞானத்தாற் சூரிய
மண்டலவிர்த்தியாயுள்ள தூருயிர்க்கு இவ்வுலகிலுள்ள வெப்பொரு
ளும் புலப்படுமாறுபோல வியாபகமாய தமதறிவின்கண் மாயாகாரிய
மாகிய சொல்லும்பொருளும் ஆகிய இருகூற்றுப் பிரபஞ்சத்தின்
கண்ணுமுள்ள வெண்ணிறந்த விசேடப்பொருள்களும் தோன்றுமா
தலின் அவ்வெண்ணிறந்த விசேடஞானங்களு முணரப்பெற்றமை
யும், வகைஞானங்களையுணரவே வகையின்வகையாய ஞானங்களையு
முணரப்பெற்றமையும் கூறப்பெற்றதாம். இங்ஙனம் பிள்ளையார்
எல்லாஞானமு முணரப்பெற்றமை சேக்கிழார்சுவாமிகள் அச்செய்யு
ளிற்கூறிய வந்நால்வகைஞானமும் செம்பொருளாகவும் ஏனையவெ
ல்லா மாக்கப்பொருளாகவும் நன்குவிளங்குமாறுகூறியருளினர். எல்
லாஞானத்தையு முணர்தலாவது வகைஞானங்களி லீற்றுஞானமா
கிய மெய்ஞ்ஞானமொழிய ஏனையன குறைபாடும், ஐயமுடையதா
யினும் ஒன்றற்கொன்று கருவியாய்நின்று மெய்ஞ்ஞானத்திற்குக் கா

மாய் அதனைப் பெற்றவழி யொழியுமியல்பினவெனவும், மெய்ஞ்ஞானஞ் சுயம்பிரகாசமாய் விளங்குவதெனவு மறிவதாம்.

இவ்வாறு ஞானத்தைப் பகுத்துணர்வது, பயனை இம்மை மறுமையென விரண்டாயும், இம்மை உம்மை அம்மையென மூன்றாயும், அறம் பொருளின்பம் வீடு என நான்காயும், முத்தியைப் பதமுத்தி பரமுத்தியென விரண்டாயும், சலோக சாமீப சாரூப சாயுச்சியம் என நான்காயும் வகுப்பதுபோலவா மென்றுணர்க. பிண்டத்தைக் கூறுது வகையைக் கூறுமிடத்து எவ்வகையைக் கூறினுமமையுமாதலால் இந்நால்வகை ஞானத்தைப் பிள்ளையார்க்கு நிகழ்ந்தமுறைமையிற் கூறியதாம். எவர்க்கு எவ்வகைச்செய்கை நிகழும், அவர்க்கு அவ்வகை ஞானமுன்னிகழும் என்பது நியமமாகலின், ஆளுடையபிள்ளையார் சிவபெருமானைச் சிந்தித்து மவர்க்குத் திருப்பதிகஞ்சாத்தி அவர்பணிநின்றும் கலைஞான நிரம்பப்பெற்றும் சுவானுபூதிப் பெருவாழ்வுற்றும் விளங்கியமையால் யாம் மேற்கூறிய நால்வகைஞானமே யவர்பெற்றாரென்பது நிராட்சேபனையாய்ப் பெறப்படும்.

இதுகாறு மெமதுரையாம். இனிப் பிறருரைகளை யாராய்வாம்.

இவ்வாறன்றி யிக்கவிக்குப் பரம் அபரம் என ஞானமிரண்டென்பாரும், கேட்டன்முதலிய ஞானம் நான்கென்பாரும் இவற்றுடனே சிறிதுவேறுபட் டுரைப்பாருமாகப் பொருள்கூறுவோர் பலதிறப்படுவர். அவற்றுட் கேட்டன்முதலிய மூன்றும அபரஞானமும நிட்டையாகிய வனுபூதிஞானம் பரஞானமுமாதலின் ஞானமிரண்டென்பார்க்கும் நான்கென்பார்க்கு மெட்டுணையும் பேதமில்லாதிருக்கவும் பலரும் பொருளொருமை யுணரமாட்டாது சொல்வேற்றுமையையே கருதி யொருவரையொருவர் மறுத்து அதற்குத் தத்தமுரையே பொருளெனவும், ஏனையோருரை பொருளன்றெனவும் ஆரவாரித்து அவ்வாரவாரம் பலதிக்கினுஞ் செல்லுமாறு கூறுவதன்றியும் ஆங்காங்கு ஒவ்வோர் கருததுப்படக் கூறியவான்றோர் செய்யுட்களையும் தத்தங் கருத்திற்கிசைய உதாரணங்காட்டி யிடர்ப்படுவர். இவ்விருதிறத்தார் கூறுங்கருத்து மொன்றேயாயு மிக்கவிப்பொருளோடு மேற்கூறியவாறே வேற்றுமையின்றியு மிருப்பினும் அவர்கூறுமுறைகளா லக்கருத்துப் பெறப்படாமையின் அவை பொருந்துவனவல்லவென்பது காட்டுதும்.

பரம் அபரம் என விரண்டுஞானங் கொள்வோர் சிவனடியே சிந்திக்கு ஞானமாகிய உவமையிலாக் கலைஞானமெனவும் பாங்கினி

லோங்கிய ஞானமாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானமெனவும் கொண்டுகூட்டி யொவ்வொன்றினு முந்தியஞானமும் பிந்திய ஞானமும் பொதுப்பெயருஞ் சிறப்புப்பெயருமாக நின்றுபுணர்ந்த பண்புத்தொடராகக் கூறுவர்: சாரைப்பாம்பு, ஆயன் சாத்தன் என்றாற்போல. அத்தொடர்கள், பாம்புச்சாதியுள் சாரையையன்றி ஏனைய பாம்புகளையும், ஆயச்சாதியுள் சாத்தனையன்றி யேனையோரையு மொழித்தலின், அவைபோல்வனவாய இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடர்களெல்லாம் ஓர்சாதிப் பொதுமையை யுணர்த்தாது அதினேகதேசத்தையே யுணர்த்துவனவென்பது தெள்ளிதிற்றுணியப்படும். ஆதலிற் சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானமாகிய உவமையிலாக் கலைஞானம் என்னுந் தொடர் சிவனடியைச் சிந்திக்கும் ஞானத்தையுணர்த்துகின்ற ஞானகாண்டம்பற்றி நிகழும் ஞானத்தையேயன்றி சுவர்க்காதி போகப்பயன்றரும் சோதிட்டோமமுதலிய கன்மங்களைக்கூறுங் கன்மகாண்டமும், கருடோபாசனைமுதலியவற்றைக்கூறு முபாசனகாண்டமும், இசைநூலுமாகிய இன்னோரன்னவைபற்றி நிகழும் ஞானங்களை யுணர்த்தாமை நன்குவிளங்கும். அதனாற்பிள்ளையார் கலைஞானத்தினேகதேசத்தைப் பெற்றதேயன்றி முற்றுமுணர்ந்தாரென்பது பெறப்படாமல் ஓதாமல்முழுதொருங் குணர்ந்தா ரென்பதனோடு மாறுபடும். பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானமாகிய மெய்ஞ்ஞான மென்னுந்தொடரும், பாசநீக்கத்திற்குரிய ஞானமேயன்றி யாநந்தம் நுகர்தன்முதலிய ஏனைய ஞானங்கள் விலக்கப்படுதலின் மெய்ஞ்ஞானத்தினேகதேசத்தை யுணர்த்துமென்பதும் மேற்கூறியவாறே பெறப்படும். ஆதலினித் தொடர்களாற்பிள்ளையார் பரஞான வபரஞானங்களினேகதேசத்தையே பெற்றாரென்பது பெறப்படுதலிற் பொருந்தாது.

அங்ஙனமன்று. சிவனடியைச்சிந்தித்தல் கலைஞானத்திற்கும்,பவமதனை யறமாற்றல் மெய்ஞ்ஞானத்திற்கும் இலக்கணமாகக் கொள்ளின் அபரஞான பரஞானப் பொதுமையை யுணர்த்துமாகலிற் பொருந்தாமை யெவ்வாறென்னில் :—சிவனடியைச் சிந்தித்தல் ஞானகாண்டத்திற்கேயன்றி யேனையவற்றிற்கெல்லா மிலக்கணமாதல் செல்லாமையால் அவ்விலக்கணத்திற் கவ்வியாத்திக் குற்றந்தங்குதலினானும், ஏனைய நூல்களும் சிவனடியைச் சிந்தித்தற்குப் பரம்பரையிற் காரணமாமாதலின் அங்ஙனங்கூறியதென
காரணமாதலின் அதுவுஞ் சலனமுடையதாமெனக் கூறுதல்போல

விபரீதவிலக்கணமாய் வருவாமாதலானும் இவ்விருதொடரினுள் ஒவ்வொன்றினுமுள்ள விசேடணவிசேடிய ஞானமிரண்டுட், சிவனடியைச் சிந்தித்தல் அல்லது பவமதனையறமாற்றல் என்னு மிலக்கணமொன்றே யுடைமையின் வேறுபொருள் குறியாது ஒரேபொருள் நறித்துநிற்றலின் அவற்றுள் ஒன்று பிருதுவி பூதம் நாற்றமுடைய பூதமென்புழி யொருபூதம் மிகையாமாறுபோலப் பயனின்றிக் கூறுதலின்பாற்படுதலானும் இலக்கணமாகக் கொள்ளினும் பொருந்தாமையே துணியப்படும். அங்ஙனமாயிற் சிவனடியே சிந்திக்குங் கலைஞானமென்பதுபோல "மேவருஞான மிரண்டவற்றொன்று விமலனார் பாததாமரையே, யோவறுமன்பினுணர் திருவளிக்கு மொப்பிலாவுபர்கலைஞானம், தாவரும்பவத்தை வேரொடுங்களையுந் தக்கமெய்ஞ்ஞானமொன்றிவற்றுற், சாவதும்பிறப்புந் தணப்புறச்சிவத்தைச் சார்ந்ததுவாய்நிற்றல்யோகம" என்பது முதலியவாக வான்றோர் கூறுவனவற்றின் கருத்தென்னையெனின்:—அவற்றிற்குச் சொன்னிலையாற் பொருள்கொள்ளக் கிடக்குமாறே ஞானகாண்டம்பற்றி நிகழும் கலைஞானமென்பதே யாமன்றி வேறன்று ஞானகாண்டத்தை யுணர்த்துதலேயன்னோர் கருத்தாகலி னங்ஙனங்கூறுவர் - ஆயினும் உபலக்கணத்தா லாங்காங்கு கலைஞானப் பொதுமையினையும் அவைவேண்டுழி யுணர்த்திநிற்கவும்பெறும். அற்றேலுபலக்கணத்தால் யாமுமப்பொருள்கொள்வோமெனிற் கவி கருதியபொருளை நேராகக்கூறாதவிடத்தே யுபலக்கணங் கொள்ளுதலன்றி நேரேபொருள்கொள்ளக் கிடக்குமிடத்து வேறுபொருள்கொண்டு அப்பொருளை யுபலக்கணத்தா லமைத்தல் பொருள்கோண் முறைமையயன்றாதலானும், அதனாற்போந்த பயனின்மையானும் அதுவுங்கொள்ளத்தக்க தன்றென்பதேயாம்.

அன்றியுஞ் சிவதரிசனத்தால், திருவடிக்கட் சிந்தனையும், சிந்தனையாற் பணிநிற்றற் கருத்தும் உதித்தவழி அதற்குக் கருவியாகக் கலைஞானம் நிரம்பப்பெற்றுச் சுவானுபூதிபெற்ற முறைமை பெரியபுராணத்திற் பிள்ளையார் சரித்திரத்தைக் கற்ற நுண்ணுணர்வுடையர்க் கினிதுவிளங்குவ தன்றியும் விதிகடந்து நிகழ்ந்தவவரது ஞானத்திற்கு விதிவழித்தாய வேனையோரது ஞானம்போலக் கலைஞானமாகிய சோபான முறைமை முற்பட்டு நிகழாமையா லங்ஙனம் நிகழ்ந்ததாகக்கோடல் நிகழ்ச்சிமுறைமையோடு மாறுபடுமாறும் உற்றுணர்க.

இதனால்விசேடண விசேடியஞானங்களைப் பொதுப்பெயருஞ் சிறப்புப்பெயருமாகிய இருபெயரொட்டுப் பண்புத்தொடராகக்கூறி

இக் கவிப்பொருள்சம்பந்தமாய் மகாசந்நிதானத்திற் கின்னுமோர் சிறிது அடியேன்றெரிவிக்கக் கருதுகின்றேன். அஃதென்னையெனில், செம்பொருளானு மாக்கப்பொருளானு மிக்கவி, யெல்லாஞானத்தையு முணர்த்துதலின் ஓர் நிலமுழுதுஞ் சந்தனச்சேறாய் வழிக்கண் விழித்து அதன்கண் வழியேசென்று அணிவோ ரணிதலுங், கண்மூடி வழியறியாது அதன்கட்போய்வீழ்ந் துழப்போருழத்தலுமாகிய விரண்டுஞ் சந்தனகுழம் பாடுதலே யாமாறுபோல, தொடர்ப் பொருளுணர்ந்து கூறுவோரு முணராதுகூறுவோரு மாகியயாவருளாயும் எல்லாஞானமும் பெறுதலாகிய பொருளினைக் கூறுதலால் அவர்கள் பொருளெல்லா மெய்ப்பொருளே யாமென்றற்கண் ஐசங்கையேயில்லை. இதனை யான்முன்கூறியு முள்ளேன், ஆயினும் அவர்கள்கூறு மப்பொருளை யுணர்த்தற்கண் அவர்கள் கொள்ளுஞ் சொற்றொடர்கள் சொல்லாற்றல் சிதைதலானும், எல்லாஞானமும் என்பதே பொருளாகலான் ஒருவரையொருவர் மறுக்கு முகத்தான் இரண்டு ஞானத்தையும் நான்கு ஞாத்தையும் பொருளல்லவென்று மறுத்தற்கண் பொருளாற்றல் சிதைதலானும் அச்சொல்லாற்றலையும் பொருளாற்றலையும் பொருந்தக் கூறுமாறே கருதி யானிவ்வுரை செய்ததன்றி வேறுபொருள் கூறுதல கருதியன்று. அவர்களுரைமுதலியன கொள்ளத்தக்கன வல்லவென்பதை யெளிதாயுணர்த்துமாறு அவர்களைநோககி யான்கூறும் வினவிவை :—

(1.) நாற்றத்தைததரும் வளமிக்க நல்ல பூதமாகிய உவமையில்லாத் தூலபூதமென்னுந் தொடர் அதனை யெவ்வாறு கொள்ளினும் தூலபூதங்கள் யாவுமெனப் பொருள்படுமோ ?

(2.) சொல்லைக் குறிப்புச்சொல் வெளிப்படைச்சொல்லெனவும், இயற்சொற் றிரிசொல்லெனவு மிவ்விரண்டாய் வகுப்பதும், பெயர்வினை யிடையுரியென நான்காய் வகுப்பதும் மக்கட் சாதியை உயர்ந்தோர் தாழ்ந்தோரெனவும் ஆண்பெண்ணெனவும்,இவ்விரண்டாயும் பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரனென நான்காய் வகுப்பதும் அவ்வாறு வகுத்தவகையுட் சொல்லையாவது மக்கட் சாதியையாவது கூறுவோர் தத்தங் குறிப்பிற்கேற்ற யாதேனு மோர்வகையைக் கூறுமிடத்து ஒருவரதனை மறுத்து வேறோர் வகையை காட்டப் புகுத லறிவின்பாற்படுமோ ?